ஶ்ரீ:

ஶ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஶ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

பெரியாழ்வார் அருளிச்செய்த

# ॥ அரவணையாய் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஶ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ‖ அரவணையாய் ‖

## முலையுண்ண அழைத்தல்

‡அரவணையாய்! ஆயர் ஏறே!⋆
அம்மம் உண்ணத் துயில் எழாயே⋆
இரவும் உண்ணாதுறங்கி நீ போய்⋆
இன்றும் உச்சி கொண்டதாலோ⋆
வரவும் காணேன் வயிறசைந்தாய்⋆
வன முலைகள் சோர்ந்து பாயத்⋆
திருவுடைய வாய்மடுத்துத்⋆
திளைத்துதைத்துப் பருகிடாயே (1)

வைத்த நெய்யும் காய்ந்த் பாலும்⋆
வடி தயிரும் நறு வெண்ணெயும்⋆
இத்தனையும் பெற்றறியேன்⋆
எம்பிரான்! நீ பிறந்த பின்னை⋆
எத்தனையும் செய்யப் பெற்றாய்⋆
ஏதும் செய்யேன் கதம் படாதே⋆
முத்தனைய முறுவல் செய்து⋆
மூக்குறிஞ்சி முலை உணாயே (2)

தந்தம் மக்கள் அழுது சென்றால்⋆
தாய்மார் ஆவார் தரிக்ககில்லார்⋆
வந்து நின்மேல் பூசல் செய்ய⋆
வாழ வல்ல வாசுதேவா!⋆
உந்தையர் உன்திறத்தர் அல்லர்⋆
உன்னை நான் ஒன்றுரப்ப மாட்டேன்⋆
நந்தகோபன் அணி சிறுவா!⋆
நான் சுரந்த முலை உணாயே (3)

கஞ்சன் தன்னால் புணர்க்கப்பட்ட⋆
கள்ளச் சகடு கலக்கழிய⋆
பஞ்சி அன்ன மெல்லடியால்⋆
பாய்ந்த போது நொந்திடும் என்று⋆
அஞ்சினேன் காண் அமரர் கோவே!⋆
ஆயர் கூட்டத்தளவன்றாலோ⋆
கஞ்சனை உன் வஞ்சனையால்⋆
வலைப்படுத்தாய்! முலை உணாயே (4)

தீய புந்திக் கஞ்சன் உன்மேல்⋆
சினம் உடையன் சோர்வு பார்த்து⋆
மாயந் தன்னால் வலைப் படுக்கில்⋆
வாழகில்லேன் வாசுதேவா!⋆
தாயர் வாய்ச்சொல் கருமம் கண்டாய்⋆
சாற்றிச் சொன்னேன் போகவேண்டா⋆
ஆயர் பாடிக்கணி விளக்கே!⋆
அமர்ந்து வந்தென் முலை உணாயே (5)

மின் அனைய நுண் இடையார்⋆
விரி குழல் மேல் நுழைந்த வண்டு⋆
இன் இசைக்கும் வில்லிபுத்தூர்⋆
இனிதமர்ந்தாய்! உன்னைக் கண்டார்⋆
என்ன நோன்பு நோற்றாள் கொலோ⋆
இவனைப் பெற்ற வயிறுடையாள்⋆
என்னும் வார்த்தை எய்துவித்த⋆
இருடீகேசா! முலை உணாயே (6)

பெண்டிர் வாழ்வார் நின் ஒப்பாரைப்⋆
பெறுதும் என்னும் ஆசையாலே⋆
கண்டவர்கள் போக்கொழிந்தார்⋆
கண்ணிணையால் கலக்க நோக்கி⋆
வண்டுலாம் பூங்குழலினார்⋆ உன்
வாயமுதம் உண்ண வேண்டி⋆

கொண்டு போவான் வந்து நின்றார்⋆
    கோவிந்தா! நீ முலை உணாயே (7)

இரு மலை போல் எதிர்ந்த மல்லர்⋆
    இருவர் அங்கம் எரி செய்தாய்!⋆ உன்
திருமலிந்து திகழ் மார்வு⋆
    தேக்க வந்தென் அல்குல் ஏறி⋆
ஒரு முலையை வாய் மடுத்து⋆
    ஒரு முலையை நெருடிக் கொண்டு⋆
இரு முலையும் முறை முறையா⋆
    ஏங்கி ஏங்கி இருந்துணாயே (8)

அங்கமலப் போதகத்தில்⋆
    அணி கொள் முத்தம் சிந்தினாற் போல்⋆
செங்கமல முகம் வியர்ப்பத்⋆
    தீமை செய்திம் முற்றத்தூடே⋆
அங்கம் எல்லாம் புழுதியாக⋆
    அளைய வேண்டா அம்ம! விம்ம⋆
அங்கமரர்க்கமுதளித்த⋆
    அமரர் கோவே! முலை உணாயே (9)

ஓட ஓடக் கிங்கிணிகள்⋆
    ஒலிக்கும் ஓசைப் பாணியாலே⋆
பாடிப் பாடி வருகின்றாயைப்⋆
    பற்பநாபன் என்றிருந்தேன்⋆
ஆடி ஆடி அசைந்தசைந்திட்டு⋆
    அதனுக்கேற்ற கூத்தை ஆடி⋆
ஓடி ஓடிப் போய்விடாதே⋆
    உத்தமா! நீ முலை உணாயே (10)

‡வார் அணிந்த கொங்கை ஆய்ச்சி⋆
    மாதவா! உண் என்ற மாற்றம்⋆
நீர் அணிந்த குவளை வாசம்⋆
    நிகழ நாறும் வில்லிபுத்தூர்⋆

பார் அணிந்த தொல் புகழான்⋆
    பட்டர்பிரான் பாடல் வல்லார்⋆
சீர் அணிந்த செங்கண்மால் மேல்⋆
    சென்ற சிந்தை பெறுவார் தாமே (11)

‖ பெரியாழ்வார் திருவடிகளே சரணம் ‖